**செய்தி வெளியீடு எண்: 149** **நாள்: 28.02.2018**

<u>செய்தி வெளியீடு</u>

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி K. பழனிசாமி அவர்கள் 27.2.2018 நாளிட்ட கடிதத்தில், தமிழ்நாட்டில் ராணுவத் தளவாட உற்பத்தி மையம் அமைக்க உத்தரவிட்ட மாண்புமிகு பாரதப் பிரதமர் திரு.நரேந்திர மோடி அவர்களுக்கும், மாண்புமிகு மத்திய பாதுகாப்பு அமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் அவர்களுக்கும், தமிழ்நாடு மக்கள் சார்பாகவும், தனது சார்பாகவும் மனமார்ந்த நன்றியினைத் தெரிவித்துக் கொண்டார்கள்.

தமிழ்நாட்டில் இத்தகைய ராணுவத் தளவாட உற்பத்தி மையம் அமைக்கப்பட்டபின் பல மாவட்டங்களில் வேலைவாய்ப்புகள் உருவாகி, அம்மாவட்டங்களின் ஒட்டுமொத்த வளர்ச்சிக்கு இது துணைபுரியும் என்றும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தனது கடிதத்தில் தெரிவித்தார்கள்.

*******

வெளியீடு: இயக்குநர், செய்தி மற்றும் மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9.
நாள்: 28.2.2018